வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர் :செங்கேணி பழனி

தேதி 15.05.2025 நேரம் மாலை 6.10 மணி

---

தலைப்புச் செய்திகள்

மீன்வளத் துறையின் வளர்ச்சி, மற்றும், எதிர்காலத் திட்டங்கள் குறித்து, பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று புதுடெல்லியில், மறு ஆய்வுக் கூட்டம் நடத்தினார்.

தீவிரவாதத்திற்கு எதிரான, இந்தியாவின் அசைக்க முடியாத, வலுவான பதிலடிதான், ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கை என்று, பாதுகாப்பு அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் கூறியுள்ளார்.

மாற்றுத் திறனாளிகளும் அணுக ஏதுவாக, டிஜிட்டல் வசதிகளை இலகுவாக்குவது குறித்த உச்சி மாநாடு, புதுடெல்லியில், இன்று நடைபெற்றது.

ராணுவ வீரர்களுக்கு நன்றி தெரிவிக்கும் வகையில் புதுச்சேரி மாநில பிஜேபி இன்று மாலை புதுச்சேரியில், தேசியக் கொடி ஊர்வலம் ஒன்றை நடத்தியது.

------------------------

மோடி-மீன்வளம் (6)

மீன்வளத் துறையின் வளர்ச்சி குறித்தும், இதற்கான எதிர்காலத் திட்டங்கள் குறித்தும், பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று புதுடெல்லியில், மறு ஆய்வுக் கூட்டம் நடத்தினார். ஆழ்கடல் மீன்பிடிப்பு மற்றும் மீன் உணவு ஏற்றுமதியை அதிகரிப்பது குறித்து, இக்கூட்டத்தில் முக்கியமாக விவாதிக்கப்பட்டது. மத்திய மீன்வளத்துறை அமைச்சர் திரு.

ராஜீவ் ரஞ்சன் சிங், மற்றும் மூத்த அதிகாரிகள் இதில் கலந்து கொண்டனர்.

------------------------

*ராஜ்நாத்-ஜம்மு காஷ்மீர் 1 (16)*

பாகிஸ்தான் மற்றும் பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீரில் இருந்து ஏவப்படும் தீவிரவாதத்திற்கு, இந்தியாவின் அசைக்க முடியாத, வலுவான பதிலடிதான், ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கை என்று, பாதுகாப்பு அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் கூறியுள்ளார். இன்று ஜம்மு-காஷ்மீரின் பாதாமி பாக் கண்டோன்மென்ட் பகுதியில், ராணுவ வீரர்களிடையே உரையாற்றிய அவர், ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கையை வெற்றி பெறச் செய்த இந்திய பாதுகாப்புப் படையினரின் துணிச்சல், மனஉறுதி மற்றும், அர்ப்பணிப்பு குறித்து, நாடே பெருமிதம் அடைவதாக கூறினார். பாகிஸ்தான் பொறுப்பற்ற முறையில், இந்தியாவை மிரட்டும் விதத்தை தற்போது உலகமே பார்த்து விட்டதாகவும், அவர் கூறினார். பாகிஸ்தானின் கையில் அணு ஆயுதங்கள் இருப்பது, பாதுகாப்பானது அல்ல என்பதால், சர்வதேச அணுசக்தி ஏஜென்சி, பாகிஸ்தானிய அணு ஆயுதங்களின் மேற்பார்வைப் பொறுப்பை, ஏற்க வேண்டும் என்றும், அவர் வலியுறுத்தினார். தீவிரவாதமும், பேச்சு வார்த்தைகளும், ஒன்றோடு ஒன்று சேர முடியாது என்பதால், எதிர்காலத்தில் பாகிஸ்தான் உடனான எந்தவொரு பேச்சு வார்த்தையிலும், பாகிஸ்தான் ஆக்ரமிப்பு காஷ்மீர்

*ராஜ்நாத்-ஜம்மு காஷ்மீர்* 2 (4)

மற்றும், தீவிரவாதம் குறித்து மட்டுமே பேசப்படும் என்றும் திரு. ராஜ்நாத் சிங் குறிப்பிட்டார். ஜம்மு-காஷ்மீர் துணை நிலை ஆளுநர் திரு. மனோஜ் சின்ஹா, முதலமைச்சர் திரு. உமர் அப்துல்லா, தலைமை ராணுவ தளபதி திரு. உபேந்திர துவிவேதி உள்ளிட்டவர்களும், இந்நிகழச்சியில் கலந்து கொண்டனர்.

-----------------------

*பாகிஸ்தான் தீவிரவாதம் 1 (5)*

தீவிரவாதத்தை எதிர்ப்பதாக பாகிஸ்தான் பொது வெளியில் கூறிக் கொள்கின்ற போதிலும், உலக அளவில் தடை விதிக்கப்பட்ட தீவிரவாதிகளுக்கு, தொடர்ந்து இடம் அளித்துக் கொண்டுதான் வருகிறது. தீவிரவாதிகளுக்கு பயிற்சி அளித்து, களத்தில் இறக்கி விடுவது, பாகிஸ்தானிய அரசியலில், நீண்டகாலமாகவே தொடர்கிறது. இதுகுறித்து ஒரு செய்தித் தொகுப்பு…

(வாய்ஸ்)

*பாகிஸ்தான் தீவிரவாதம் 2 (13)*

(வாய்ஸ்)

மும்பை தீவிரவாத தாக்குதலில், முக்கிய மூளையாக செயல்பட்ட ஹஃபீஸ் சையீதின் நெருங்கிய உறவினரும், அமெரிக்க அரசால் தடை விதிக்கப்பட்ட தீவிரவாதியுமான ஃபைசல் நதீம், லஷ்கரே-தொய்பா தீவிரவாத அமைப்பின் அரசியல் பிரிவு சார்பில், அண்மையில், கராச்சியில் நடைபெற்ற பேரணியில் பகிரங்கமாக பங்கேற்றதை வைத்துப் பார்த்தாலே, பாகிஸ்தானில் அரசியலுக்கும், தீவிரவாதத்திற்கும் இடையில் நிலவும் ஆழமான தொடர்புகளை புரிந்து கொள்ள முடியும். பாகிஸ்தான் ராணுவத்திற்கு ஆதரவாக, மதவாதிகள் நடத்திய இப்பேரணியில், லஷ்கரே தொய்பாவுடன், அமெரிக்க அரசால் தடை செய்யப்பட்ட மற்றொரு தீவிரவாத அமைப்பான, அஹ்லே சுன்னத் வால் ஜமாத் அமைப்பினரும் பங்கேற்றுள்ளனர். பாகிஸ்தானில், அரசு மற்றும் ராணுவத்தின் நிழல் அமைப்புகளாகவே, தீவிரவாதக் குழுக்கள் செயல்பட்டு வருவதற்கு, இதைவிட வேறு சான்றுகள் தேவையில்லை.

------------------------

*குடியரசுத் தலைவர் 1 (15)*

அரசால் நிறைவேற்றி அனுப்பப்படும் மசோதாக்கள் மீது, குடியரசுத் தலைவர் மற்றும் ஆளுநர்கள் முடிவெடுக்க, அரசியல் சாசனத்தில் காலக்கெடு எதுவும் விதிக்கப்படாத நிலையில், நீதிமன்றம் இதுபோன்ற காலக்கெடு விதிக்க இயலுமா என்பதை நீதிமன்றம் பரிசீலிக்க வேண்டும்

என, குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு, உச்சநீதிமன்றத்திற்கு குறிப்பு அனுப்பி உள்ளார். இதுகுறித்து 14 கேள்விகளை அவர் எழுப்பி, அரசியல் சாசனத்தின் 200 மற்றும் 201ஆவது விதிகளின் கீழ் ஒப்புதலுக்கு அனுப்பபப்படும் மசோதாக்கள் மீது முடிவெடுப்பதில், ஆளுநருக்கு, எந்த வகையான விருப்பத் தேர்வுகள் உள்ளன என்பது குறித்து, உச்சநீதிமன்றம் கருத்துக் கூற வேண்டும் என்றும், கேட்டுக் கொண்டுள்ளார். ஆளுநர்களின் செயல்பாடுகளை, நீதிமன்ற மறு ஆய்விற்கு உட்படுத்த, அரசியல் சாசனத்தில் முழுமையான தடை இருப்பதாகவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

நீதிமன்றத்தால் விதிக்கப்படும் காலவரைக்குள், ஆளுநர் முடிவெடுக்கத் தவறினால், மசோதாவிற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டதாக எடுத்துக் கொள்ளப்படும் என உச்சநீதிமன்றம் உத்தரவிட்டு இருப்பதை,

குடியரசுத் தலைவர் 2 (8)

குடியரசுத் தலைவர் கேள்விக்கு உட்படுத்தி, நிகர்நிலை ஒப்புதல் என்ற இத்தகைய கருத்து, அரசியல் சாசனத்திற்கே அந்நியமானது என்றும், குடியரசுத் தலைவர் மற்றும் ஆளுநர்களின் அதிகாரத்திற்கு சுற்று எல்லை விதிப்பது போல், இந்த உத்தரவு அமைந்து இருப்பதாகவும், கூறியுள்ளார்.

சட்டம் மற்றும் பொது முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சனைகளில், உச்சநீதிமன்றத்தின் ஆலோசனைகளை குடியரசுத் தலைவர் கேட்டுப் பெற வகை செய்யும், 143-ன் கீழ் 1 அரசியல் சாசனப் பிரிவின் கீழ், குடியரசு தலைவரின் குறிப்பு, உச்சநீதிமன்றத்திற்கு அனுப்பப் பட்டுள்ளது.

------------------------

ஸ்டாலின் (5)

இதற்கிடையே, மசோதாக்கள் மீது முடிவெடுக்க காலவரையறை விதிக்கப் படுவதை குடியரசுத் தலைவர் ஏன் ஆட்சேபிக்க வேண்டும் என தமிழக முதலமைச்சர் திரு. மு.க ஸ்டாலின் கேள்வி எழுப்பி யுள்ளார். இச்செயல், ஜனநாயக முறையில் தேர்தெடுக்கப்பட்டமாநில அரசை

வலுவிழக்கச் செய்யும் என்று, சமூக ஊடகத்தில் வெளியிட்டுள்ள பதிவில் அவர் கூறியுள்ளார்.

------------------------

*மாற்றுத் திறனாளி 1 (4)*

மாற்றுத் திறனாளிகளும் அணுக ஏதுவாக, டிஜிட்டல் வசதிகளை இலகுவாக்குவது குறித்த சர்வதேச அணுகல் விழிப்புணர்வு தினத்தை ஒட்டி, மத்திய அரசு, இன்று புதுடெல்லியில், அனைவரையும் உள்ளடக்கிய இந்தியா என்ற தலைப்பில், மாநாடு ஒன்றை நடத்தியது. இதுகுறித்து கூடுதல் விவரங்கள்.....

(வாய்ஸ்)

*மாற்றுத் திறனாளி* 2 (12)

(வாய்ஸ்)

மத்திய அரசின் மாற்றுத் திறனாளிகள் அதிகார மேம்பாட்டுத் துறைச் செயலர் திரு. ராஜேஷ் அகர்வால், இம்மாநாட்டில் பேசுகையில், மொழி, கல்வி, வாழ்க்கை வசதிகள், மற்றும், வாழ்வாதாரங்களை மாற்றுத் திறனாளிகளும் எளிதாக அணுகும் வகையில், நிலவரங்களை மேம்படுத்த வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தினார். சைகை மொழியின் கற்றல் மற்றும் பயன்பாட்டை அதிகரிக்க, அரசு மேற்கொண்டு வரும் முயற்சிகளை அவர் சுட்டிக் காட்டி, நாட்டில் மாற்றுத் திறனாளிகளுக்கு ஏற்ற சூழல் ஒன்றை உருவாக்குவதில், கார்ப்பரேட் துறையினரும் அரசுடன் ஒத்துழைக்க வேண்டும் என்றார். மாற்றுத் திறனாளிகளில் 90 சதவிகிதம் பேர், சமூகத்தில் மற்றவர்களுக்கு இணையாக பங்களிக்கும் திறன் கொண்டவர்கள்தான் என்றும், இவர்கள் தங்களின் உரிமைகளை கோரிப் பெறுதல் அவசியம் என்றும் அவர் வலியுறுத்தினார்.

------------------------

*யுபிஎஸ்சி* (7)

ஓய்வு பெற்ற ஐஏஎஸ் அதிகாரியும், முன்னாள் பாதுகாப்புத் துறைச் செயலருமான திரு. அஜய் குமார், யுபிஎஸ்சி-மத்திய பணியாளர்

தேர்வாணையத்தின் தலைவராக இன்று பதவி ஏற்றுக் கொண்டார். தேர்வாணையத்தின் மூத்த உறுப்பினர் லெப்டினன்ட் ஜெனரல் ராஜ் சுக்லா, திரு. அஜய் குமாருக்கு, பதவி பிரமானம் செய்து வைத்தார். முன்னதாக, திரு. அஜய் குமாரை, யுபிஎஸ்சி தலைவராக நியமிக்கும் உத்தரவை, குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு, நேற்று பிறப்பித்தார்.

-------------------------

*திரங்கா யாத்திரை* (10)

ராணுவ வீரர்களுக்கு நன்றி தெரிவிக்கும் வகையில் புதுச்சேரி மாநில பிஜேபி இன்று மாலை புதுச்சேரியில், தேசியக் கொடி ஊர்வலம் ஒன்றை நடத்தியது. மாநில பிஜேபி தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான திரு. செல்வ கணபதி, இப்பேரணியை தொடக்கி வைத்தார். பழைய பேருந்து நிலையத்திலிருந்து புறப்பட்டு, அஜந்தா சிக்னல் வரை நடைபெற்ற இப்பேரணியில், சட்டப் பேரவைத் தலைவர் திரு. ஆர் செல்வம், அமைச்சர்கள் திரு. நமச்சிவாயம், திரு. சாய் சரவணன் குமார், சட்டமன்ற உறுப்பினர்கள் திரு. கல்யாண சுந்தரம், திரு. ராமலிங்கம், திரு. அசோக் பாபு, மற்றும், பிஜேபி நிர்வாகிகளும், முன்னாள் ராணுவத்தினர், விளையாட்டு வீரர்கள், உட்பட ஏராளமான பொது மக்களும், மூவர்ணக் கொடியை ஏந்திய வண்ணம் கலந்து கொண்டனர்.

-------------------------

*ரங்கசாமி ஆதி திராவிடர்* (9)

புதுச்சேரியில், மேட்டுப்பாளையம் சாணாரப்பேட் பகுதியைச் சேர்ந்த பாபு என்பவர், வன்கொடுமையால் பாதிக்கப்பட்டு உயிரிழந்த நிலையில், வன்கொடுமைத் தடுப்பு சட்டத்தின் கீழ், அவரது குடும்பத்தினருக்கான 8 லட்சத்து 55 ஆயிரம் ரூபாய் நிதி உதவியை, முதலமைச்சர் திரு. ரங்கசாமி இன்று வழங்கினார். இறந்து போனவரின் மனைவி ராஜேஸ்வரி, இந்த உதவியை பெற்றுக் கொண்டார். சட்டப் பேரவையில் உள்ள முதலமைச்சர் அலுவலகத்தில் நடைபெற்ற

இந்நிகழ்ச்சியில், ஆதி திராவிடர் மற்றம் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் திரு. சாய் சரவணன் குமார், அரசுக் கொறடா திரு.ஏ.கே.டி ஆறுமுகம் மற்றும் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

-------------------------

*பரிசளிப்பு* (9)

புதுச்சேரியில், சுற்றுலாத் துறை சார்பில் நடைபெற்ற வணிகத் திருவிழாவில் பொருள் வாங்கி, குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப் பட்டவர்களுக்கான பரிசளிப்பு விழா, கடற்கரை சாலை காந்தி திடலில், நாளை மாலை நடைபெற உள்ளது. முதலமைச்சர் திரு. ரங்கசாமி இவ்விழாவில் கலந்து கொண்டு, முதல் மற்றும் 2ஆம் பரிசுகளை வழங்குகிறார். சட்டப் பேரவைத் தலைவர் திரு. ஆர். செல்வம் முன்னிலையில் நடைபெறும் இவ்விழாவில், சுற்றுலாத் துறை அமைச்சர் திரு. லட்சுமி நாராயணன் மற்றும்இதர அமைச்சர்களும், சட்டமன்ற உறுப்பினர் திரு. சிவ சங்கரன் மற்றும் அதிகாரிகளும் கலந்து கொள்ள உள்ளனர்

-------------------------

*ஏனாம்* (6)

ஏனாமில், 10ஆம் வகுப்பு மற்றும் 12ஆம் வகுப்பு பொதுத் தேர்வுகளில், அதிக மதிப்பெண் பெற்ற மாணவர்களுக்கும், அதிக தேர்ச்சி விகிதம் காட்டிய பள்ளிகளுக்கும், புதுச்சேரி அரசின் டெல்லி சிறப்பு பிரதிநிதி திரு. மல்லாடி கிருஷ்ணாராவ் இன்று பாராட்டு விழா நடத்தி கவுரவித்தார். மண்டல நிர்வாக அதிகாரி திரு. ஆர். முனுசாமி உள்ளிட்டோர் இவ்விழாவில் கலந்து கொண்டனர்.

------------------------

*வானிலை* (13)

வளிமண்டல கீழடுக்கு சுழற்சி மற்றும் மேலடுக்கு சுழற்சி காரணமாக, தமிழகத்தில் ஒருசில இடங்களிலும், புதுச்சேரி-காரைக்கால் பகுதிகளிலும், லேசானது முதல், மிதமான மழை பெய்யக் கூடும் என,

சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. இன்றைய தினம், கோவை, நீலகிரி, தர்மபுரி, கிருஷ்ணகிரி, மற்றும், திருப்பத்தூர் மாவட்டங்களின் ஓரிரு இடங்களில் கனமழைக்கு வாய்ப்பு இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. வெப்பநிலையை பொறுத்தவரை, வரும் 19ஆம் தேதி வரை பெரிய மாற்றத்திற்கான வாய்ப்பு குறைவுதான் என்றாலும், ஓரிரு இடங்களில், அதிகபட்ச வெப்பநிலை, 2 முதல் 3 டிகிரி செல்சியஸ் வரை, படிப்படியாக குறையலாம் என்றும் வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. இதற்கிடையே, கடந்த 24 மணி நேரத்தில், அதிகபட்சமாக, திருச்செங்கோடு, ஒகேனக்கல் ஆகிய இடங்களில், 9 செ.மீ மழை பதிவாகி உள்ளது. காரைக்காலில், 6 செ.மீ மழை பெய்துள்ளது.

------------------------

வக்ஃபு (14)

2025ஆம் ஆண்டு வக்ஃபு திருத்த மசோதாவின் செல்லுபடித் தன்மையை ஆட்சேபிக்கும் மனுக்களின் அடிப்படையில், இடைக்கால உத்தரவு பிறப்பிக்கும் பிரச்சனையை, உச்சநீதிமன்றம் வரும் 20ஆம் தேதி, ஆராய இருக்கிறது. இதுகுறித்து அரசு மற்றும் மனுதாரர் தரப்பு வழக்கறிஞர்கள், வரும் 19ஆம் தேதிக்குள் தங்களின் குறிப்புகளை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய வேண்டும் என, தலைமை நீதிபதி திரு. வி.ஆர் கவாய், நீதிபதி திரு. அகஸ்டின் மாசிஹ் ஆகியோர் அடங்கிய அமர்வு இன்று உத்தரவிட்டது. முந்தைய 1995ஆம் ஆண்டு வக்ஃபு சட்டத்தின் சில பிரிவுகளை நிறுத்தி வைக்கும் கோரிக்கை குறித்து, வரும் 20ஆம் தேதி விசாரணைகளின் போது பரிசீலிக்கப்பட மாட்டாது என்றும், நீதிபதிகள் தெரிவித்தனர். தலைமை நீதிபதி பதவியில் இருந்து, நீதிபதி திரு. சஞ்சீவ் கன்னா, கடந்த 13ஆம் தேதி ஓய்வு பெற்றதை தொடர்ந்து, ஏற்கனவே அவரது தலைமையிலான அமர்வின் விசாரணையில் இருந்த இந்த வழக்கு, புதிய தலைமை நீதிபதி திரு. கவாய் தலைமையிலான அமர்வுக்கு மாற்றப் பட்டுள்ளது.

------------------------

மீன்வளத் துறையின் வளர்ச்சி, மற்றும், எதிர்காலத் திட்டங்கள் குறித்து, பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று புதுடெல்லியில், மறு ஆய்வுக் கூட்டம் நடத்தினார்.

தீவிரவாதத்திற்கு எதிரான, இந்தியாவின் அசைக்க முடியாத, வலுவான பதிலடிதான், ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கை என்று, பாதுகாப்பு அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் கூறியுள்ளார்.

மாற்றுத் திறனாளிகளும் அணுக ஏதுவாக, டிஜிட்டல் வசதிகளை இலகுவாக்குவது குறித்த உச்சி மாநாடு, புதுடெல்லியில், இன்று நடைபெற்றது.

ராணுவ வீரர்களுக்கு நன்றி தெரிவிக்கும் வகையில் புதுச்சேரி மாநில பிஜேபி இன்று மாலை புதுச்சேரியில், தேசியக் கொடி ஊர்வலம் ஒன்றை நடத்தியது.

இத்துடன் இந்த செய்தி அறிக்கை நிறைவு பெறுகிறது